2002 அக்டோபர் 28]

46–

மீன்பிடித்தல்

***16265–திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

53 வகையான மீன்களையும், 54 வகையான கடல் உயிரினங்களையும் மீனவர்கள் பிடிக்கக்கூடாது என்ற மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை பிறப்பித்துள்ள உத்தரவால், தங்களது தொழிலும், வாழ்க்கையும் நசிந்துவிடும் என்று மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் மேற்படி ஆணையை மத்திய அரசு திரும்பப் பெறவோ அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

16–11–2001 அன்று தமிழக அரசு கடிதம் மூலம் மத்திய அரசுக்கு தடையின் பாதிப்புகளை விளக்கியும் இவ்விஷயத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் தலையிட வேண்டிய அவசியத்தையும், இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதன் அடிப்படையிலே மத்திய அரசுக்கு தமிழக மீன் துறை ஆணையர் மற்றும் இயக்குநர் அலுவலகம் அறிவுறுத்தியதன்பேரில் 28–11–2001 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற இப்பொருள் தொடர்பான கலந்தாய்வுக்கூட்டத்தில் தமிழக மீனவர்களின் முறையீடுகள் குறித்து விளக்கப்பட்டது. பின்னர் இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முயற்சியால் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை ஏற்கெனவே 11–7–2001 அன்று வெளியிட்ட மீன் பிடி தடை அறிவிக்கைக்குப் பதிலாக திருத்த அறிவிக்கை ஒன்றினை 5–12–2001 அன்று வெளியிட்டது. இந்த திருத்த அறிவிக்கையின்படி முழுவதுமாக தடை செய்யப்பட்டிருந்த சுறா மற்றும் திருக்கை இனங்களில் 24 இனங்களுக்கு மட்டும் மீன்பிடி தடை அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் திருத்திய தடையாணைக்கு மாற்றங்கள் கோரி பல்வேறு மனுக்கள் அரசுக்கு வரப்பெற்றுள்ளன. அக்கோரிக்கைகளை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசிலித்து வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2002 அக்டோபர் 28

திரு. என். ரெங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மீது பற்று கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, குறிப்பாக மீனவர்களின் நலனில் மிகவும் அக்கறை கொண்ட அரசு ஆகும். இந்நிலையில் தற்போது மைய அரசு 53 வகையான மீன்களையும், 54 வகையான கடல்வாழ் உயிரினங்களையும் பிடிக்கத் தடையாணை பிறப்பித்துள்ளது. இத்தடை ஆணை பிறப்பித்ததனால் தமிழகத்தில் வாழும் கடலோர மீனவர்களில் சுமார் 50 இலட்சம் பேர் மிகப் பெரிய அளவில் வருமான பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர். குறிப்பாக பூம்புகார், சீர்காழி, நாகப்பட்டினம் பகுதி மக்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மீனவர்களின் வாழ்வு மேம்பட பல்வேறு நலத் திட்டங்களை மீனவ மக்களுக்கு அளித்துள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு இத்தடையாணையை உடனடியாக இரத்து செய்ய பலமுறை மத்திய அரசை வலியுறுத்தியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மீண்டும் வலியுறுத்தி அந்த ஆணையை அடியோடு இரத்து செய்ய ஆவன செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 53 வகையான மீன்பிடித் தடைச் சட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் 24 வகையான மீன்களுக்கு மட்டும் தடையாணை பிறப்பிக்க மத்திய அரசுக்கு வலியுறுத்தி அம்மா அவர்களுடைய முயற்சியால் ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. கூடுதலாக எல்லாவகையான மீன்களையும் பிடிப்பதற்கான தடையை இரத்து செய்வதற்கும் அம்மா அவர்களுடைய அரசு முயற்சி எடுத்துவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 53 வகையான மீன்களைப் பிடிக்கக்கூடாது என்று சொல்லி மத்திய அரசு ஆணை பிறப்பித்திருந்தாலும், அதை நமது மீனவர்கள்தான் கடைப்பிடிக்கிறார்கள். வெளிநாட்டுக் கப்பல்கள் மத்திய அரசிடமிருந்து அனுமதியைப் பெற்று நமது கடலோரப் பகுதிகளிலே அதை தொழிற்சாலையாகவே நடத்துகின்ற கப்பலை நிறுத்தி, அப்படிப்பட்ட மீன்களைப் பிடித்து அவர்கள் கொள்ளை இலாபம் சம்பாதிக்கிற

சூழ்நிலையில், அப்படி கொடுக்கப்பட்டிருக்கின்ற அனுமதியினை மத்திய அரசு ரத்து செய்து ஒட்டுமொத்தமாக நமது மீனவர்களும், அந்நியர்களும் அந்த வகையான மீன்களைப் பிடிக்கக்கூடாது என்பதற்கான முயற்சியினை நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எடுக்குமா? உடனடியாக மத்திய அரசிடம் எடுத்துரைத்து அதைத் தடை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெருமகனார் கூறியபடி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் அந்த 53 வகையான மீன் பிடித் தடைச் சட்டத்தைத் தளர்த்தச் செய்திருக்கிறது. அதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. நிச்சயமாக எல்லா வகையான மீன் பிடிப்புகளையும் தடை செய்வதற்கான தடை நீக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. உரிமை மீறல் பிரச்சினையும், ஒத்திவைப்புத் தீர்மானமும்

அரசு ஊழியர்களில் ஒரு பிரிவினர் 23-10-2002 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்பு ஒன்று கொடுத்திருந்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், நான் சொல்லிவிடுகிறேன். திரு. துரைமுருகன் அவர்கள், டாக்டர் க. பொன்முடி அவர்கள் (குறுக்கீடு) திரு. இ. புகழேந்தி அவர்கள், திரு. எ.வ. வேலு அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25-10-2002 அன்று